## 12

# கவனம்குவிக்கப்பட்ட வாழ்வை வாழுதல்

## (பிலிப்பியர் 3:10-16)

*பசியாயிருந்து ஒரு புலி, ஒரு மானின் வாசனையைக் கண்டு அதைத் தொடர்ந்தது. அது மானைத் தொடருகையில், ஒரு முயலின் வாசனை அதற்குத் தென்பட்டது. அது உடனே இப்புறமாகத் திரும்பி, முயலைத் தொடரத் தொடங்கிற்று. பின்பு அது ஒரு எலியின் வாசனையினால் வழிவிலக்கப்பட்டு அதைத் தொடரத் தொடங்கிற்று. கடைசியில் அது அந்த எலி உட்சென்று மாயமாகிவிட்ட ஒரு பொந்தினருகே வந்து நின்றது. அந்தப் புலி அந்த நாளின் தொடக்கத்தில் இருந்ததைக் காட்டிலும் அந்த நாளின் முடிவில் அதிக பசியாக உணர்ந்தது. இந்தக் கதை, நம்மில் சிலர் நமது வாழ்வை எவ்வாறு செலவிடுகிறோம் என்பதை விவரிக்கிறது: கடைசியில் சிறிதளவே சாதித்திருக்கும் நிலைவரைக்கும் - இதனால் அல்லது அதனால் வழிவிலக்கப்படுதல்.*

*சட்டப்படி, தனிச்சிறப்பான சாதனைகளை ஏற்படுத்துபவர்கள் தங்கள் சிந்தனைகள் மற்றும் ஆற்றல்களை ஒரு இலக்கின் மீது கவனம் குவிப்பதன் மூலம் அவ்வாறு செய்கின்றனர். நான் ஒரு சிறு பையனாக இருந்தபோது, எனது தந்தையார் எனக்கு, கிளென் கன்னிங்ஹாம் (1909-88) என்பவரின் வரலாற்றையும் ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தில் உலக அளவில் முதலிடம் பெறவேண்டும் என்ற அவரது தீர்மானத்தையும் பற்றி எனக்குக் கூறினார். கிளென் மற்றும் அவரது சகோதரர் ஆகிய இருவரும், கான்ஸாஸ் மாகாணத்தின் கிராமப் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்ந்து கல்வி பயின்றனர். ஒரு குளிர்காலக் காலை வேளையில், அவர்கள் பள்ளி இல்லத்தின் அடுப்பில் நெருப்பு மூட்டிக் குளிர் காய்ந்து கொண்டு இருந்தபோது, அந்தக் கட்டிடத்தில் தீப்பற்றிக் கொண்டது. கிளென் தனது சகோதரனைச் சுமந்து கொண்டு வெளியேற முயற்சி செய்தார். அவர் கதவின் அருகே நிலைகுலைந்து விழுந்தார். அந்த இடத்திற்கு விரைந்து வந்த மக்கள் அந்த இரு பையன்களையும் வெளியே இழுத்து விட்டனர். இருவரும் கடுமையான தீக்காயங்களால் பாதிக்கப்பட்டிருந்தனர். மருத்துவர் வந்து சேர்ந்தபோது, கிளென்னுடைய சகோதரனின் இறப்பை அறிவித்த அவர் "கிளென் தேறி எழ மாட்டார்" என்று கூறினார். பல நாட்களுக்குப் பின்பு அந்த மருத்துவர், "அவன் [கிளென்] உயிர்பிழைத்துக் கொள்வான், ஆனால் அவன் ஒருக்காலும் நடக்கமாட்டான்" என்று கூறினார். கிளென் நேராக நின்று நடக்கும்படிக்கு கிளென்னின் கைகளை அவரது தந்தையார், நடவுக்கலப்பையில்[1] கட்டி வைப்பார். கடைசியில் அவரால் தாமாகவே கால்களைத் தேய்த்துத் தேய்த்து நடக்க முடிந்தது. பின்பு அவரால் கால்களைத் தேய்க்காமலேயே நடக்க முடிந்தது. பின்பு அவர் ஓடத் தொடங்கினார். அவர்*

*கல்லூரி அளவில், நாட்டு அளவில் மற்றும் உலக அளவில் ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தில் வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கினார். அவர் தமது நாட்களில் மிகச்சிறந்த ஓட்டப்பந்தய வீரர்களில் ஒருவராக ஆனார் - ஏனென்றால் அவர் தமது வாழ்வில் கவனக்குவிப்பைக் கொண்டிருந்தார்.*

*நமது பாடத்திற்கான வேத வசனப் பகுதியான 3:10-16ல் நாம், ஒருவரின் வாழ்விற்கான கவனக்குவிப்பை - ஆவிக்குரிய கவனக்குவிப்பை - காணுகிறோம். பவுல், "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று எழுதினார் (வசனங்கள் 13ஆ, 14). இவ்வசனப் பகுதியை நான் புதிரானதாகக் காணுகிறேன். "ஒன்று செய்கிறேன்." "நான் ஒரு நூறு விஷயங்களைத் தொடங்குகிறேன்" என்பதோ அல்லது "ஒரு டஜன் விஷயங்களை நான் முயற்சி செய்கிறேன்" என்பதோ அல்ல, ஆனால் "*ஒன்று* செய்கிறேன்" என்பதே இங்குள்ளது. "செய்கிறேன்" என்ற வார்த்தைகள் மொழிபெயர்ப்பாளரால் தரப்பட்டுள்ளன. மூல வேதவசனத்தின் நேரடித் தரவழைப்பு பின்வருவது போன்று வாசிக்கப்படும்: "ஒரு விஷயம்! பின்னானவைகளை மறந்து."* LB *வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "இந்த ஒரு விஷயத்தைச் சுமந்திருக்க நான் எனது எல்லா ஆற்றல்களையும் கொண்டுவருகிறேன்."*

*இந்தக் கருத்துடன் நான் போராடுகிறேன். நான் மிகப் பல திட்டங்களில் ஈடுபட்டு, அவற்றில் பெரும்பான்மையானவற்றை சுமாராகவே செய்து முடிக்கிறேன். நான் எனது வாழ்வை எளிமையாக்க முயற்சி செய்கிறேன் - ஆனால் அதில் சிறிதளவே வெற்றி கிடைக்கிறது. எனது எழுது மேஜைக்குப் பின்னால் பின்வரும் ஜெர்மானியப் பழமொழியை எழுதி ஒட்ட வைத்துள்ளேன்: "மிக அதிகமானதைத் தொடங்குகிறவர் மிகக் கொஞ்சமாகவே சாதிக்கிறார்." எனது நண்பன் ஒருவர், "கொஞ்சம் செய்து அதை மிகச்சிறப்பாகச் செய்தல்" என்பதே தமது புத்தாண்டுத் தீர்மானமாகும் என்று என்னிடத்தில் கூறினார். நானும் அதே தீர்மானத்தை மேற்கொள்ள முயற்சி செய்தேன் - மற்றும் விரைவிலேயே அதை மீறிவிட்டேன். ஒருவேளை நீங்களும் கூட, கவனக் குவிப்பில் நிலைத்திருப்பதில் இடர்ப்பாடு கொண்டு இருக்கலாம். விஷயம் அப்படியிருந்தால், பவுலின் கவனம் குவிக்கப்பட்ட வாழ்வு பற்றிய பாடம் நம் இருவருக்கும் உதவலாம்.*

## ஒரு நபர் மீது கவனம் குவித்தல் (3:10, 11)

*நமது முந்திய படிப்பில் நாம், பவுலிடமிருந்து பின்வரும் வார்த்தைகளை வாசித்தோம்: "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை* அறிகிற அறிவின் *மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" (3:8ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). கிறிஸ்துவை "அறிதல்" என்பதில், அவரைப் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பதை விட அதிகமானவை உள்ளடக்குகின்றன என்று நாம் வலியுறுத்தினோம்; அது அவருடன் ஒரு* உறவை *மேம்படுத்துவதை உள்ளடக்குகிறது. ஜெரால்டு ஹாவ்தோர்ன் என்பவர், "எல்லாவற்றையும் நஷ்டம் என்று" எண்ணப் பவுல் மனவிருப்பமாயிருந்தார், ஏனென்றால் "இப்போது ...* ஒரு விஷயம் *பவுலின் நிறைவான மதிப்புடையதாக இருந்துள்ளது, அது கிறிஸ்து இயேசுவைப் பற்றிய தனிப்பட்ட அறிவு என்று பெயர் கொண்டுள்ளது" என்று உற்றுக் கவனித்துள்ளார்.*[2]

*கிறிஸ்துவை அறிதலுக்கான அப்போஸ்தலரின் விருப்பம் 10ம் வசனத்தில் விரிவாக்கபட்டுள்ளது: "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்." கிறிஸ்துவுடன் ஒரு விசேஷித்த உறவை மகிழ்வுடன் அனுபவித்தார் என்ற கருத்தில் பவுல் கிறிஸ்துவை ஏற்கனவே அறிந்திருந்தார் (கலாத்தியர் 2:20), ஆனால் அவர் இன்னும் அதிக ஆழமான வளமான அறிவைப் பெற ஏங்கினார். எனது திருமணத்துடன் தொடர்புடைய ஒரு விவரிப்பு சிந்தைக்கு வருகிறது. நான் (19 என்ற "பக்குவமான" வயதில்) ஜோவைத் திருமணம் செய்துகொண்டபோது, அவளை நான் அறிந்து இருந்ததாக நினைத்தேன். ஆண்டுகள் கடந்து சென்றுள்ள நிலையில், அந்த அறிவு வளர்ந்துள்ளது - ஆனால் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் கால திருமண வாழ்விற்குப் பின்பு இப்போதும் அவள் என்னைத் திகைப்படையச் செய்கிறாள். அவளைப் பற்றிய எனது அறிவு, முழுமையிலிருந்து இன்னமும் தொலைவிலேயே உள்ளது.*

## இந்த வாழ்வில் கிறிஸ்துவை அறிதல்

பவுல், இயேசுவைப் பற்றிய *எல்லாவற்றையும்* அறிய விரும்பினார். "*அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை" அறிய அவர் [பவுல்] விரும்பினார் (வசனம் 10ஆ).*[3] இந்தக் குறிப்பு, கிறிஸ்து நம்மை மரித்தோரிலிருந்து எழுப்பும் வல்லமைக்கானதாக இருக்கலாம் (காண்க 3:21), ஆனால் அனேகமாகப் பவுல், உயிர்த்தெழுந்த கர்த்தர் மூலமாகக் கிறிஸ்தவருக்குத் கிடைக்கக் கூடிய வல்லமை அல்லது பெலத்தைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம். அப்போஸ்தலரின் வாழ்வானது இந்த வல்லமையினால் ஏற்கனவே ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. அவர் "... நான் இப்போழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்று எழுதினார் (கலாத்தியர் 2:20). மீண்டுமாக அவர், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:13). அதே வேளையில் அப்போஸ்தலர், அந்த பலம் மற்றும் வல்லமை தொடர்ந்து *புதுப்பிக்கப்படுதலுக்கான* தேவையை உணர்ந்தார். மின்சேமக்கலங்கள் [பேட்டரிகள்] மறுமின்னூட்டம் செய்யப்படாவிட்டால், அவைகள் "சக்தி இழந்து" போகின்றன. அதுபோன்றே, நம் யாவருக்கும் அவ்வப்போது "மறுமின்னூட்டம்" செய்விப்பது அவசியமாக உள்ளது.

அத்துடன் கூடுதலாக, பவுல் "அவரது பாடுகளின் ஐக்கியத்தை அறிய விரும்பினார்" (வசனம் 10இ). "ஐக்கியம்" என்பது "பகிர்தல்" அல்லது "இணைந்து பங்கேற்றல்" என்பதாக உள்ளது. கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்காத எவரொருவரும், அவரை முழுமையாக அறிந்துகொள்ள இயலாது என்று பவுல் நினைத்தார்! இவ்வகையான ஐக்கியத்தைப் பற்றிச் சிலர் அதிகமான உற்சாகம் கொண்டிருப்பதில்லை. ராபர்ட் லெய்ட்லா என்பவர், தாம் அடிக்கடி "ஊழியம் செய்யவே இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்" என்ற கொள்கையைக் கண்டிருந்தாகவும், ஆனால் "பாடுபடவே இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்" என்ற கொள்கையை ஒருக்காலும் கண்டிருந்ததில்லை என்று கூறினார்.[4]

*பவுல், கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றிருந்தார். அவர், "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:17). கொரிந்தியருக்கு அவர் பின்வருமாறு எழுதினார்:*

> *கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்போழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்போழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம் (2 கொரிந்தியர் 4:10, 11).*

*கிறிஸ்துவுக்காகப் பாடுபடுதலின் மூலமாகப் பவுல், தமக்காகக் கர்த்தர் பாடுபட்டிருந்ததை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டார். அவர் கிறிஸ்துவை இன்னும் சிறப்பாகப் புரிந்து கொண்டார்.*

*பவுல், தமது சிந்தனையை, "அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி" என்ற வார்த்தைகளுடன் முடித்தார் (வசனம் 10ஈ). அவர், கர்த்தருடைய உதவியுடன், சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்துக் கொண்டிருந்தார். அவரால், "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று எழுத முடிந்தது (கலாத்தியர் 2:20அ, ஆ).*

*கிறிஸ்துவை இன்னும் முழுமையாக அறிய வேண்டும் என்ற பவுலின் விருப்பம், குறைந்த பட்சம் பின்வரும் நான்கு முகப்புக்களைக் கொண்டிருந்தது:*

- *ஒரு தனிப்பட்ட அனுபவம்: "நான் அவரை அறியும்படிக்கு."*
- *ஒரு வல்லமை நிறைந்த அனுபவம்: "அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையையும்."*
- *ஒரு வேதனை நிறைந்த அனுபவம்: "அவரது பாடுகளின் ஐக்கியத்தையும்."*
- *ஒரு நடைமுறை அனுபவம்: "அவரது மரணத்திற்கு ஒப்பாகுதல்."[5]*

*எனக்கு, கிறிஸ்துவை அறிதலுக்கான தாகத்தின் தொடக்கத்தையும், அதைத்தொடர்ந்து கிறிஸ்தவ வாழ்வில் வர வேண்டியவற்றையும் கூறுகிற, ரோமர் 6ம் அதிகாரம் நினைவுக்கு வருகிறது. பின்வரும் வசனங்களை நீங்கள் வாசிக்கையில், கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் உயிர்த்தெழுதல் அத்துடன் கூடுதலாக அவரது மரணத்தின் சாயலுக்கு ஒப்பாகுதல் ஆகியவற்றின் மீதான வலியுறுத்தங்களைக் கண்ணோக்குங்கள்:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய*

*மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.*

*ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள் (ரோமர் 6:3-11).*

மனம் வருந்திய விசுவாசி என்ற வகையில் பெறும் ஞானஸ்நானம் (தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல்), கிறிஸ்துவை அறியவருதலின் தொடக்கமாக உள்ளது - ஆனால் அது பயணத்தின் முடிவாக இருப்பதில்லை. இயேசு, "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை *அநுதினமும்* எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (லூக்கா 9:23; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

## இனிவரும் வாழ்வில் கிறிஸ்துவை அறிதல்

இயேசுவைப் பின்பற்றும்படிக்கு நாம் நம்மையே அர்ப்பணித்து இருந்தாலும், இந்த வாழ்வில் அவரைப் பற்றி முற்றிலுமாக நாம் அறிய முடியுமா? இல்லை. அதைப் பவுல் புரிந்துகொண்டு இருந்தார், எனவே அவர் பரலோகத்தில் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் தாம் வாழப்போகும் காலத்தை முன்னெதிர் நோக்கினார். 3:10ம் வசனத்தின் இறுதிப் பகுதியில், அவர் இதைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவு: "நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்."

''உயிரோடெழுந்திருப்பதற்கு'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது, இது புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. இது "உயிர்த்தெழுதல்" என்பதற்கான வழக்கமான (*anastasis* என்ற) வார்த்தையை, "வெளியே" அல்லது "வெளியின்" என்று அர்த்தப்படுத்துகிற (*ek* என்ற) முன்னிடைச் சொல்லைக் கொண்டு முகவுரைப் படுத்தப்படும் கிரேக்கக் கூட்டுவார்த்தையாக உள்ளது. பின்பு பவுல், *ek* என்ற வார்த்தையைத் திரும்பவும் மரித்தோர் என்ற வார்த்தைக்கும் பயன்படுத்தினார். அப்போஸ்தலர் நேரடி அர்த்ததில் ''மரித்தோரிலிருந்து வெளியே உயிர்த்து வெளியே எழுப்பப்படுதல்" என்பதைப் பற்றிப் பேசினார். இது ஆங்கில [மற்றும் தமிழ்] மொழியில் தேவைக்கு அதிகமானதாக இருக்கலாம், ஆனால் கிரேக்க மொழியில், வார்த்தைகளைத் திரும்பத் திரும்பத் கூறுதல்

என்பது வலியுறுத்தம் தரும் வழியாக இருந்தது. இது பவுல், உயிர்ப்பிக்கப்படும் சிலரிலிருந்து வெளியே (அதாவது, ''அவர்களிலிருந்து பிரிந்து'' அல்லது "அவர்களுக்கு அப்பால்") எழுப்பப்படுவார் என்பதை வலியுறுத்தும் அவரது வழியாக இருந்தது.

"... பிரேதக்குழிகளிலுள்ள *அனைவரும்* ... நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்ற பொதுவான உயிர்த்தெழுதலைப் பற்றி இயேசு போதித்தார். பிலிப்பியர் 3:10ல் அனேகமாக பவுல், தாம் "தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி'' எழுந்திருப்பவர்களில் ஒருவராக *அல்ல*, ஆனால் தாம் "நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருப்பவர்களில்" ஒருவராக எழுப்பப்படும்படி எதிர்பார்த்திருந்ததாகக் கூறியிருப்பார்.

"ஜீவனை அடையும்படி எழுந்திருத்தல்" ஆச்சரியமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். அப்போது எல்லா போராட்டங்களும் தீர்த்துவைக்கப்படும், எல்லா சுகவீனங்களும் குணமாக்கப்படும் (ஒழுக்கரீதியான மற்றும் மாம்சரீதியான) எல்லா மனித பலவீனங்களும் நீக்கிப்போடப்படும் மற்றும் எல்லாத் தவறுகளும் என்றென்றைக்குமாகச் சரியாக்கப்படும்.[6] இருப்பினும் பவுலுக்குக் கிறிஸ்துவை முழுமையாக அறிய வருதலைக் காட்டிலும் அதிக அற்புதமான ஆசீர்வாதம் வேறு எதுவும் இல்லை!

10ம் வசனத்தை விட்டுச் செல்வதற்கு முன்னர், நான் "எப்படியாயினும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறியாக வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு, 10ம் வசனத்திலிருந்து 11ம் வசனத்திற்கு ஒரு மென்மையான மாறுதலை அளிக்கிறது: "... அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, *எப்படியாயினும்* நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கும், ..." (என்னால் வலியுறுத்தப்படுகிறது). உண்மையில் இந்த மாறுதலானது NASB வேதாகமத்தில் கருத்தாகத் தெரிவிக்கப்படுவதைப் போன்று மூலவசனத்தில் அவ்வளவு தெளிவாக இருப்பதில்லை.[7] இவ்வசனப்பகுதி "ஆல்" [அதாவது ஆங்கிலத்தில் ''if,'' என்று அர்த்தப்படும் (*ei* என்ற) வார்த்தையுடனும் ''எவ்வாறு'' அல்லது ''எவ்வாறேனும்'' என்பதற்கான (*pos* என்ற) வார்த்தையுடனும் தொடங்குகிறது. எனது NASB வேதாகமப்பிரதியில் 10ம் வசனத்தின் முதற்பகுதியில் பின்வரும் குறிப்பு உள்ளது: "நேரடியான அர்த்தத்தில் *எவ்வாறேனும்*." KJV வேதாகமம் ''if by any means'' என்ற சொற்றொடருடன் இவ்வசனத்தைத் தொடங்குகிறது. NIV வேதாகமத்தில் ''மற்றும் எனவே, எவ்வாறாயினும்'' என்றுள்ளது. RSV வேதாகமத்தில் ''சாத்தியமானால்'' என்றுள்ளது.

''ஆல்,'' ''எப்படியாயினும்'' மற்றும் ''சாத்தியமானால்'' போன்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ள விஷயமானது, பவுல் கர்த்தருடன் எழுப்பப்படுதல் பற்றிச் சந்தேகம் கொண்டிருந்தாரோ என்று சிலரை ஆச்சரியப்படச் செய்துள்ளது. இவ்விஷயத்தில் அப்போஸ்தலர் உறுதியற்ற தன்மை எதையும் தமது சிந்தையில் தேக்கி வைத்திருக்கவில்லை என்று மற்ற வசனப்பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன (காண்க 2 தீமோத்தேயு 4:8).

பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் முன்னதாக அவர், தாம் மரிக்கும்போது, தாம் "கர்த்தருடன் இருக்க" செல்லுவோம் என்ற தமது நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார் (1:23). பின்பு ஏன் அவர், "எப்படியாயினும்" என்று அர்த்தப்படும் சொற்றொடரைப் பயன்படுத்தினார்? பவுல், சந்தேகத்தை அல்ல, ஆனால் தாழ்மையையே வெளிப்படுத்தினார் - அதாவது அவர் தமது சொந்த முயற்சிகளின் விளைவாக இரட்சிக்கப்படப் போவதில்லை, ஆனால் தேவனுடைய கிருபையின் மூலமாகவே இரட்சிக்கப்படப் போகிறார் என்பதை அவர் திரும்பவும் ஒப்புக்கொண்டார் - என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். பேதுரு, "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், ..." என்று எழுதியபோது இதேவகையான மன அமைவைத் தெரியப்படுத்தினார் (1 பேதுரு 4:18).

இந்த பகுதியை முடிப்பதில் நாம், இதன் மைய ஆய்வுக்கருத்திற்கு திரும்புதல் அவசியமாக உள்ளது: பவுல் கிறிஸ்துவை அறிதல் மீது கவனம் குவித்தார். அதுவே நமது வாழ்வின் முதன்மைக் கவனக்குவிப்பாவும் இருக்க வேண்டும். இயேசுவின் கூற்று ஒன்றைத் தழுவிக் கொள்வதென்றால், இதுவே நித்திய ஜீவனாக உள்ளது: தேவனையும் அவர் அனுப்பியுள்ள கிறிஸ்துவையும் அறிதல் (காண்க யோவான் 17:3).

## ஒரு பந்தயப் பொருளின் மீது கவனம் குவித்தல் (3:12-14)

அது நம்மை நமது பாடத்தின் இருதயம் போன்ற மையப் பகுதிக்குக் கொண்டுவருகிறது:

> நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (வசனங்கள் 12-14).

இவ்வசனப்பகுதி, இப்பாடத்தின் தொடக்கத்தில் மேற்கோள் காண்பிக்கப்பட்ட வசனங்களைக் கொண்டுள்ளது. இவ்வார்த்தைகளை நாம் அதிகம் நெருக்கமாகக் கண்ணோக்குகையில், பவுலின் "ஒன்று" என்பதற்குப் பல முகப்புகள் இருப்பதை நாம் காணுகிறோம். அது அவரது வாழ்வின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி இருந்தது: அவரது நிகழ்காலம், அவரது கடந்த காலம் மற்றும் அவரது எதிர்காலம்.

### நிகழ்காலத்தைப் பொறுத்த மட்டில்: தாழ்மை அவசியம்!

பவுல், யூதர் என்ற வகையிலான தமது கடந்த காலம் (வசனங்கள் 4-6), மற்றும் அவர் கர்த்தருக்காக எவ்வாறு எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்திருந்தார் (வசனங்கள் 7, 8) என்பவற்றைப் பற்றி எழுதியிருந்தார். இந்த அப்போஸ்தலர் பூரணத்தன்மையை உரிமைகோரினார் என்று சிலர் முடிவு செய்யலாம்,

எனவே அவர் “நான் அடைந்தாயிற்று, ... என்று எண்ணாமல்” என்று கூறத் துரிதப்பட்டார் (வசனம் 12அ). இவ்வசனத்தில் NASB வேதாகமத்தில் ‘‘அதை’’ என்ற வார்த்தை சேர்க்கப்பட்டு அது சாய்வெழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது, இது இவ்வார்த்தை மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளதைச் சுட்டிக்காண்பிக்கிறது.நேரடி அர்த்தத்தில், பவுல், “நான் அதை ஏற்கெனவே அடைந்தாயிற்று என்று எண்ணாமல்” என்று சொன்னார். எதை அடைந்தாயிற்று? 12ம் வசனத்தை 10ம் வசனத்துடன் பிணைத்தால், பவுல் இன்னமும் தாம் உயிர்ப்பிக்கப்படவில்லை என்று கூறுவது போன்று முதலில் காணப்படலாம். இந்த சத்தியம் உரைப்பதற்கு மிகத் தெளிவானதாக காணப்படலாம், ஆனால் உயிர்த்தெழுதல் என்பது கடந்திருந்தது என்ற கள்ளப்போதகத்தைப் பவுல் எதிர்த்துப் போரிட்டார் என்று சிலர் நினைக்கின்றனர் (காண்க 2 தீமோத்தேயு 2:18). இருப்பினும், 12ம் வசனத்தைப் பவுல் கூறிய *எல்லாவற்றுடனும்* பிணைத்தலானது, அனேகமாக அவர் தாம், உயிர்த்தெழும் வேளையில் வரவிருக்கும், இயேசுவைப்பற்றிய முழுமையான அறிவை இன்னமும் பெற்றிருக்கவில்லை என்று ஒப்புக்கொண்டிருக்கலாம் என்று குறிப்பிடுவதாக உள்ளது.

தொடர்ந்து பவுல், “அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல்” என்று எழுதினார். ‘‘தேறினவன்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்கு *telos* என்பதே வேராக உள்ளது, இது “முடிவு” என்று அர்த்தப்படுகிறது. “பூரணமாக” இருப்பது எதுவோ, அது “தனது முடிவு நிலையை அடைந்திருக்கிறது,” அது தனது நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறது.[8] பவுல் நமது வேதவசனப் பகுதியில் இவ்வார்த்தையை இரு கருத்துக்களில் பயன்படுத்தினார். 12ம் வசனத்தில் அவர், தாம் “தேறினவராக” இருக்கவில்லை என்பதை, ஒப்புக்கொண்டு அவ்வார்த்தையை நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் வகையில் பயன்படுத்தினார். அப்படிப்பட்ட தேறுதல் - அவர் இருக்க வேண்டிய பிரகாரம் இருத்தல் - அவரைக் கர்த்தர் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கும் வரையிலும் நடைபெறாது. 13ம் வசனத்தின் முதற்பகுதியில் அவர், “சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை” என்று கூறியதன் மூலம் 12ம் வசனத்தின் சிந்தனைக்கு மறுவலியூட்டினார். (கிரேக்க வசனத்தில், 3:13ல் உள்ள “நான்” என்ற வார்த்தை வலியுறுத்தத்திற்காக வாக்கியத்தின் தொடக்கத்திற்கு அண்மையில் வைக்கப்பட்டுள்ளது.) பவுல் செய்யும்படி கர்த்தர் விரும்பிய எல்லாவற்றையும் அவர் ‘‘பற்றிக்கொள்ள’’ - அல்லது நிறைவேற்றவில்லை.

இவ்விடத்தில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. பவுல், புதிய ஏற்பாட்டின் மாபெரும் மனிதர்களில் ஒருவராக இருந்தார், அவர் இயேசுகிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக மாபெரும் மனிதராக இருந்தார். அவரது பயணங்கள் மற்றும் பிரசங்கங்கள் ஆகியவற்றை நினைத்துப்பாருங்கள். அவரது எழுத்துக்கள் மற்றும் அவரது செல்வாக்கு ஆகியவற்றை நினைத்துப் பாருங்கள். ஒருவேளை, கர்த்தரைத் தவிர வேறு எவரும் பவுலைப் போன்று இவ்வளவு அதிகமாக உலகத்தில் செல் வாக்குச் செலுத்தியதில்லை எனலாம். இருந்தபோதிலும் அவர், தமது ஆவிக்குரிய அடைவிடத்தைத் தாம் அடைந்து விட்டதாக நினைக்கவில்லை. நான் வாழும் இடத்தில் நாங்கள், பவுல் தாம் ‘‘அதைச் சாதித்ததாக’’ நினைக்கவில்லை என்று கூறுவதுண்டு. அப்போஸ்தலரான பவுலே பூரணத்தன்மையை உரிமை

கோர இயலாது என்றால், நாமும் அவ்வாறு உரிமைகோர இயலாது. கவனம் குவிக்கப்பட்ட வாழ்வை நடத்த, ஆவிக்குரிய வகையில் நாம் எங்கிருக்கிறோம் - எந்த அளவிற்கு நாம் வந்துள்ளோம் மற்றும் எந்த அளவிற்கு நாம் இன்னும் கடந்து செல்ல வேண்டும் - என்பதைப் பற்றிய உண்மைத்துவமான கண்ணோக்கு ஒன்று நமக்கு அவசியமாக உள்ளது.

நாம் மரிக்கும் வரையில் ஆவிக்குரிய வகையில் வளர்வதைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று நமக்கு வேதாகமம் அறைகூவல் விடுக்கிறது (எபேசியர் 4:15; 2 பேதுரு 3:18). ஒரு மரமானது வளர்வதை நிறுத்தும்போது, அது இறந்து விடுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் ஆலிவர் வென்டெல் ஹொம்ஸ் (1841-1935) என்பவர் தமது 91ம் வயதில், பிளேட்டோ என்ற தத்துவ ஞானியின் புத்தகத்தை அதன் மூலமொழியான கிரேக்கமொழியில் வாசித்துக் கொண்டிருந்தது பற்றிய கதையொன்று கூறப்படுகிறது. "ஏன்?" என்ற கேட்கப்பட்டபோது அவர், "எனது மனதை நான் இளமையாகவும் துடிப்புள்ளதாகவும் காத்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று பதில் அளித்தார். நாம் இந்த உலகத்தில் பிறந்தபோது, நாம் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் வளர வேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டிருந்தார். நாம் மறுபடி பிறந்தபோது (யோவான் 3:3, 5), நாம் ஆவிக்குரிய வகையில் வளர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எப்போதுமே அதிகமாகக் கற்பதற்கும், எப்போதுமே அதிகமாகச் செய்வதற்கும், எப்போதுமே அடைவதற்குக் கூடுதல் வளர்ச்சியும் உள்ளது. நிகழ்காலத்தை பொறுத்த மட்டில் நமக்குத் தாழ்மை அவசியம்.

## கடந்தகாலத்தைப் பொறுத்தமட்டில்: மன்னிப்பு அவசியம்!

பவுல் ஆவிக்குரிய வகையில் தாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கவில்லை என்ற உண்மையை எவ்வாறு எதிர்த்து சமாளித்தார்? அவர் அதைக் கையாண்ட ஒரு வழி பின்வருமாறு: *"பின்னானவைகளை மறந்து"* (வசனம் 13ஆ). பவுல் தமது கடந்த காலத்தின் எல்லா விஷயங்களையும் மறந்துவிடவில்லை. அவர் தேவ னுடைய வசனத்தைப் பற்றிய தமது அறிவை மறந்துவிடவில்லை. அவர் தம்மைக் கர்த்தர் தமது கிருபையினால் இரட்சித்திருந்ததை மறந்துவிடவில்லை. அவர் தமக்கு வாழ்வு கற்பித்திருந்த ஒவ்வொரு விஷயத்தையும் மறந்துவிடவில்லை. அந்தப் பாடங்கள் எவ்வளவுக்குக் கடினமாக இருந்தனவோ அவ்வளவுக்கு அவை அவரது அப்போதைய நிலைக்கு அவரைக் கொண்டு வந்திருந்தன. பவுல் எவற்றை *மறந்தார்?*

அவர் தமது கடந்த கால வெற்றிகளை மறந்திருந்தார். அவர் ஒரு யூதர் என்ற வகையில் தமது சாதனைகளைப் பட்டியலிட்டிருந்தார் (வசனங்கள் 4-6). அவர் ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் தாம் செய்திருந்த தியாகங்களைப் பற்றிப் பேசினார் (வசனங்கள் 7, 8). அவர் தமது ஊழியப் பயணங்கள், இயேசுவுக்கென்று தாம் ஆதாயப்படுத்தியிருந்தவர்கள், மற்றும் கர்த்தருக்காகத் தாம் சகித்திருந்த உபத்திரவங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசியிருக்க முடியும். அவர் தாம் சாதித்தவற்றிலேயே சிந்தை கொண்டு தரித்திருக்க முடியும் - ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவைகள் அவருக்குப் பின்னாக இருந்தன.

தேவன் நமக்கு வெற்றியை ஆசீர்வதித்திருந்தால், கடந்த கால சாதனைகளைக் குறித்துத் திருப்தி அடைந்த நிலையில் இருக்கும் அபாயம் எப்போதுமே உள்ளது. சர்தை நகரில் இருந்த சபைக்குழுமம் "உயிருள்ளதாக" இருந்தது பற்றி "ஒரு

*பெயரை" (புகழ்ச்சியை) கொண்டிருந்தது, ஆனால் அது "மரித்து" இருந்தது என்பதே அந்த கிறிஸ்துவின் கண்டுபிடிப்பாக இருந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 3:1). கிறிஸ்தவர்களின் அமைப்பு கடந்தகாலப் புகழ்ச்சியில் இருந்து வெளியேற மனவிருப்பமாக இருந்தது.*

*பவுல் தமது கடந்த காலத் தோல்விகளையும் மறந்திருந்தார். அவர் தமது யூதத்துவ சாதனைகளைப் பட்டியலிடுகையில், சபையைத் துன்புறுத்தியதை உள்ளடக்கியிருந்தார் (பிலிப்பியர் 3:6). கிறிஸ்தவர் என்ற வகையில் அவர் தாம் "முற்றிலும் தேறினவர்" என்ற நிலையை "அடைந்திருக்கவில்லை" என்பதை ஒப்புக்கொண்டார் (வசனம் 12), மற்றும் அவர் இன்னமும் அதை "பிடித்துக்கொள்ளவில்லை" (வசனம் 13). பவுல் தாம் செய்திருந்தவை மற்றும் தாம் செய்திராதவை பற்றிய வருத்தத்தில் ஒவ்வொரு நாளிலும் பவுல் ஒவ்வொரு நிமிடத்தையும் செலவிட்டிருக்க முடியும். அவர் இவ்வாறு தமது நேரத்தை வீணாக்கவில்லை. அவர் தமது பாவங்களில் இருந்து மனந்திரும்பிய பின்பு, தேவனுடைய இரக்கத்தின்மீது நம்பிக்கை வைத்து கடந்த காலத்தைத் தமக்குப் பின்னால் வைத்து விட்டார்.*

*பலர், தங்களின் கடந்த காலமானது தங்களின் நிகழ்காலத்தை அழிக்கவும் அதனால் தங்கள் எதிர்காலத்தை அழிக்கவும் அனுமதிக்கின்றனர். சிலர் தங்களின் கடந்த காலத் தோல்விகளின் நினைவுகளினாலோ அல்லது கடந்த காலப்பாவங்களின் குற்ற உணர்வினாலோ வேட்டையாடப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் நீங்கள் தோல்வி அடைந்திருந்தால் - நாம் யாவரும் அவ்வாறு தோல்வி அடைந்திருக்கிறோம் - உங்கள் குறைபாடுகளுக்காக மனம் வருந்தி, உங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்டுக் கொண்டு, இன்னும் சிறப்பாகச் செயல்பட உங்களுக்கு உதவும்படி அவரிடம் கேட்டுக் கொண்டு, தொடர்ந்து முன்னேறுங்கள். ஜப்பான் நாட்டுப் பழமொழி ஒன்று, "ஏழுமுறைகள் விழுங்கள்; எட்டாவது முறை எழுந்து நில்லுங்கள்!" என்று கூறுகிறது. மற்றவர்கள் கடந்த காலத்தில் தவறாக நடத்தப்பட்டது பற்றிக் கசப்புணர்வினால் நிரப்பப்பட்டு இருக்கின்றனர். யாரேனும் ஒருவர் செய்துள்ளது உங்கள் சிந்தனைகளை மேலாதிக்கம் செய்ய நீங்கள் அனுமதிக்கும் போது, நீங்கள் அந்தத் தனி நபருக்கு உங்கள் வாழ்வைக் கட்டுப்படுத்துதலைக் கொடுக்கிறீர்கள். உங்கள் வாழ்வைத் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். உங்களைத் தவறாக நடத்தியவரிடத்தில் நீங்கள் சரியான எண்ணப்போக்கைக் கொண்டிருக்க உதவ வேண்டும் என்று தேவனிடத்தில் கேளுங்கள், பின்பு உங்கள் வாழ்வின் பணிகளைக் கவனியுங்கள், இன்னும் மற்றவர்கள், ஒரு காலத்தில் தாங்கள் வாழ்ந்த வாழ்வைத் திரும்பிப் பார்த்து தங்கள் பழைய வழிகளுக்குத் திரும்பும்படி சோதிக்கப்படுகின்றனர். இயேசுவின் எச்சரிக்கை ஏற்புடையதாகக் காணப்படுகிறது: "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா 9:62).*

*நாம் இன்னும் கடந்த செல்வதற்கு முன்னர், "பின்னானவைகளை மறந்து என்று பவுல் கூறியபோது, அவர் எதை* அர்த்தப்படுத்தினார்?*" என்று கேட்டாக வேண்டும். அவர் கடந்த காலத்தைத் தமது நினைவில் இருந்து அழித்து விட்டதாக அர்த்தப்படுத்தினாரா? தேவன் நமது பாவங்களை மன்னிக்கும்போது, அவர் "அவற்றை இனி நினைப்பதில்லை" (காண்க எபிரெயர் 8:12; 10:17) என்று வேதாகமம் போதிக்கிறது; ஆனால் இது, அவர் அவற்றைத் தமது நினைவில்*

*இருந்து அழிக்கிறார் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை, வேதாகமத்தில், நீண்ட காலத்திற்கு முன்பே தேவனால் மன்னிக்கப்பட்டிருந்த பாவங்களைப் பற்றிய, தேவனால் ஏவுதல் பெற்ற விபரங்கள் நிறைந்துள்ளன. தேவன் நமது பாவங்களை மன்னிக்கும்போது, அவர் அவற்றிற்காக நம்மைக் கணக்கு ஒப்புவிக்கும்படி வைப்பதில்லை என்ற கருத்திலேயே அவர் "நமது பாவங்களை இனியும் நினைவில் வைப்பதில்லை"; இது அவைகள் ஒருக்காலும் நடந்திருந்தது இல்லை என்பது போன்றுள்ளது. பவுல் தமது கடந்த காலத்தைத் தமது நினைவில் இருந்து அழித்துப் போட்டிருக்கவில்லை என்பது தெளிவு, ஏனென்றால் அவர் 13ம் வசனத்திற்குச் சற்றே முந்தியுள்ள வசனங்களில் அவற்றைப் பற்றிப் பேசியிருந்தார். அப்படி என்றால் அவர் எதை அர்த்தப்படுத்தினார்?*

- *அவர் கடந்த காலத்திலேயே தங்கியிருக்கவில்லை.*
- *அவர் தமது சிந்தனையைக் கடந்த காலம் மேலாதிக்கம் செலுத்த அனுமதிக்கவில்லை.*
- *அவர் நிகழ்காலத்தில் செய்யத் தேவையானவற்றைச் செய்யாதபடி கடந்தகாலம் தம்மை வழிவிலக்க அனுமதிக்கவில்லை.*

*3:12-14ல் பவுல், பந்தயத்தில் ஓடும் ஓட்டப்பந்தய வீரரின் உருவகத்தைப் பயன்படுத்தினார்.[9] கடந்த காலத்தை மறப்பதற்கு அப்போஸ்தலரின் தீர்மானமானது அந்த உருவகத்துடன் இருவழிகளில் தொடர்புபடுகிறது: முதலாவது, ஒரு பந்தயத்தில் ஓடுவதற்கு ஒருவர் தம்மைக் கீழே விழத்தள்ளும் எதையும் புறம்பே போட வேண்டியுள்ளது (காண்க எபிரெயர் 12:1). பவுல், கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடத் தயாராகுகையில், அவர் கடந்த காலத்தின் மிகப்பெரிய எடையைப் புறம்பே கிடத்தினார். இரண்டாவது, ஒருவர் பந்தயத்தில் ஓடுகையில், பின்னால் உள்ளதன் மீதல்ல ஆனால் அவருக்கு முன்னால் உள்ளதன் மீது அவரது கவனக்குவிப்பு இருக்க வேண்டும். பின்னோக்கிக் கண்ணோக்கும் ஓட்டப்பந்தைய வீரர் தம்மால் முடிந்த அளவு மிகச்சிறப்பாகச் செயல்பட இயலாது. அவர் கவனம் சிதறடிக்கப்படுவார்; அவரது அடிவைப்புகள் நின்றுவிடும்; அவர் இடறி விழவும் செய்யலாம். நாம் காணப்போகிறபடி, பவுல் எதிர்காலத்தின்மீது கவனம் குவித்தார்.*

*பழங்காலக் கிரேக்கர்கள் மத்தியிலிருந்த ஒரு ஆசிரியர், தம்மிடம் கற்க வரவிருந்த ஒரு மாணவரிடத்தில், "நினைவில் வைக்க உனக்கு நான் கற்றுத் தருவேன்" என்று கூறினார். அதற்கு அந்த மாணவர், "ஓ இல்லை, மறப்பதற்கு எனக்குக் கற்றுத்தாருங்கள்!" என்று பதில் அளித்தார்.[10] நம்மில் பலர் நாம் நினைவில் வைக்க வேண்டியவற்றை மறந்து விடுகிறோம், மற்றும் நாம் மறக்க வேண்டியவற்றை நினைவில் வைத்திருக்கிறோம். நாம், "கர்த்தாவே - நாங்கள் நிகழ்காலத்தில் வாழும்படிக்கு - கடந்த காலத்தை மறக்க எங்களுக்குப் போதியும்" என்று ஜெபிப்பது அவசியமாக இருக்கலாம்.*

## *எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில்: வளர்ச்சி அவசியம்!*

*கடந்த காலத்தைப் பற்றி நினைக்கும்போது சிலர், கவனம் சிதறி அல்லது ஊக்கம் இழந்து போய்விடுகின்றனர் - ஆனால் பவுல் அவ்வாறு இருக்கவில்லை. அவர், "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை*

*நாடி" என்று கூறினார் (வசனம் 13ஆ, இ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்தச் சொற்றொடராக்கம் முந்திய வசனத்தில் உள்ளது போன்றது: "கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" (வசனம் 12ஆ).*

*வசனங்கள் 12 மற்றும் 13 ஆகியவற்றில் இரு வார்த்தைகள், பவுல் தமது நோக்கத்தை அடைவதில் கொண்டிருந்த வலிவூக்கத்தை விவரிக்கின்றன. 12ம் வசனத்தில் "ஆசையாய்த் தொடருகிறேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை dioko என்பதாக உள்ளது, 6ம் வசனத்தில் இவ்வார்த்தை சபையைப் பவுல் துன்புறுத்தியதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது. அவர் "நோக்கத்தின் அதே தனித்துவத்துடன் ... மற்றும் முன்பு சபையைத் துரத்திய அல்லது துன்புறுத்தியபோது கொண்டிருந்த ஒழியாத தீவிர முயற்சியுடன்" தமது இலக்கை நோக்கித் தொடர்ந்து கொண்டிருந்தார்.[11] 13ம் வசனத்தில், "முன்னானவைகளை நாடி" என்று தரவழைக்கப்பட்டுள்ள (Gk.: epekteinomenos) வார்த்தை, "முன்னோக்கிச் சாய்தல்" என்று அர்த்தப்படுகிறது. பந்தயத்தில் ஓடும் ஒரு ஓட்டப்பந்தய வீரர், ஒவ்வொரு தசையையும் இழுத்து, பந்தயத்தில் வெற்றிபெறக் கடுமையாக உழைக்கும் உருவகமே இங்குள்ளது. முடிவு எல்லையில் உள்ள நூலைத் தட்டி அதை அறுப்பதற்கு முன்னோக்கிச் சாயும் ஓட்டப்பந்தய வீரர்களில் வலிவூக்கத்தை நான் கண்டிருக்கிறேன்,[12] ஒருவேளை நீங்களும் கண்டிருக்கலாம். பல ஆண்டுகளாக, உலகப்பிரகாரமான இலக்குகளை மாபெரும் வலிவூக்கத்துடன் நாடி ஓடி, பூமிக்குரிய வெற்றியைச் சாதிக்க "தங்களை சாய்த்தவர்கள்" பலரை நான் அறிந்திருக்கிறேன். ஆவிக்குரிய இலக்குகளை அடைய அதே விருப்பம் கொண்டிருக்கும் மிகச்சிலரை நான் கண்டிருக்கிறேன்.*

*அப்போஸ்தலர் எந்த இலக்கை நோக்கி கடினமாக ஓடிக்கொண்டிருந்தார்? அவரது இலக்கில் ஒரு பகுதி இந்த வாழ்வில் உள்ளடக்கம் கொண்டிருந்தது. வார்த்தைகள் மீது ஒரு விளையாட்டைக் கையாளும் 12ம் வசனத்தைக் கவனியுங்கள்: "... கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). கிறிஸ்து, தமஸ்கு செல்லும் சாலையில் பவுலுக்குச் தரிசனம் கொடுத்ததன் மூலமாகவும் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர் செய்யும்படி தாம் விரும்புவது என்ன என்பதைக் கூறும்படிஒ ஒரு பிரசங்கியாரை அனுப்பியதன் மூலமாகவும், பவுலை "பிடித்திருந்தார்." இயேசு பவுலை, "... அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் ... அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு" அப்போஸ்தலராக அவரை [பவுலை] அனுப்பினார் என்று பவுலுக்குத் கூறப்பட்டிருந்தது (நடபடிகள் 26:17, 18அ; காண்க நடபடிகள் 9:15, 16; 22:15; ரோமர் 11:13; 1 தீமோத்தேயு 2:7). பவுல், தாம் எதற்காகப் "பிடிக்கப்பட்டாரோ" அதை "பிடித்துக்கொள்ள" விரும்பியதாகக் கூறியபோது, அவர் தாம் தமக்குத் தரப்பட்டு இருந்த ஊழியத்தை நிறைவேற்ற விரும்பியதாகவே கூறினார். அவரது வாழ்விற்கான கர்த்தருடைய நோக்கம் அவர் வாழ்வதற்குக் காரணமாயிற்று.*

*இவ்விடத்தில் இரண்டு பாடங்கள் காணப்படுகின்றன: முதவாவது, பவுலை "பிடித்ததில்" கர்த்தர் தொடக்கச் செயலை மேற்கொண்டார். பவுல் தமது சுயாதீன*

சித்தத்தை மீறுதலில் அவரை இயேசு கைப்பற்றவில்லை - நமது வாழ்வில் கிறிஸ்து செயல்படக் கூடுமுன்பு நாம் நமது சம்மதத்தை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் - ஆனால் அவர் முதல் அடிவைப்பை மேற்கொண்டார். கர்த்தர் நம்மை "பிடிப்பதிலும்" தொடக்கச் செயலை மேற்கொள்கிறார். நமக்குப் பதிலுக்கு அன்பு செய்யக் காரணமாகும்படிக்கு, முதலில் நாம் அவர்மீது அன்புகூரவில்லை. மாறாக முதலில் அவர் நம்மீது அன்புகூர்ந்தார், எனவே நாம் அவர்மீது அன்புகூருகிறோம் (காண்க 1 யோவான் 4:19). அவரது குமாரனை நமக்காக மரிக்கும்படி அவர் அனுப்பத் தூண்டுவதற்காக நாம் கீழ்ப்படிதலில் நமது அன்பை வெளிப்படுத்தவில்லை. மாறாக, நாம் தேவனுக்குச் சத்துருக்களாக இருக்கும்போதே, கிறிஸ்து நமக்காக மரித்தார் (காண்க ரோமர் 5:10). தேவனுக்கு நன்றி, இது உண்மையாக இருந்தது (மற்றும் இருக்கிறது)!

தேவன் பவுலின் வாழ்விற்கென்று ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார், மற்றும் அதைப் பவுல் நிறைவேற்ற விரும்பினார் என்பது இரண்டாவது பாடமாக இருக்கிறது. தேவன் நமது வாழ்விற்கும் ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கிறார். அவரது திட்டத்தின் ஒரு பாகம் பொதுவானதாக உள்ளது: நம்மை இரட்சிப்பதற்குக் கிறிஸ்து நம்மை "பிடிக்கிறார்"; இது தேவனுடைய திட்டத்தின் மிகவும் முக்கியமான பாகமாக உள்ளது. அவரது திட்டத்தின் அடுத்த பகுதி தனிநபருக்கு உரியதாக உள்ளது. ரோமர் 12, 1 கொரிந்தியர் 12 மற்றும் பிற வேதவசனப் பகுதிகள், நம் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு விசேஷித்த ஊழியத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கின்றன.[13] ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது விசேஷித்த ஊழியம் என்ன என்று தீர்மானிக்கவும் அதை நிறைவேற்றத் தமது பெலத்தில் முடிந்த எல்லாவற்றையும் செய்யவும் வேண்டும். பவுலைப் போல நாம் தேவனுடைய நோக்கத்தை, நமது வாழ்வில் நமது இருப்பிற்கான காரணமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பவுலின் இலக்கு பற்றிய கலந்துரையாடலுக்குத் திரும்புவதில், இது - அவர் பூமியில் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ அவ்வாறே இருத்தல் என்ற - இந்த உலக அம்சத்தைக் கொண்டிருந்தது. ஆனால் அடுத்த உலகத்தை சார்ந்ததாகவும் இருந்தது. பிலிப்பியர் 3ல் அப்போஸ்தலர் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று தொடர்ந்தார் (வசனம் 14). "தொடருகிறேன்" என்பது 12ம் வசனத்தில் உள்ள பின்வரும் கிரேக்க வார்த்தையாகவே உள்ளது: *dioko*. "இலக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*skopos* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை, "காண அல்லது கண்ணோக்க" (*skopeo*) என்று அர்த்தப்படுகிற வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவமாக உள்ளது. நாம் "telescope" (தொலைவில் காணுதல்) மற்றும் "microscope" (சிறியவற்றைக் காணுதல்) என்பவற்றில் இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். *Skopos* என்பது "கண்ணை நிலைநிறுத்தி வைக்கும் ஒரு குறியடையாளம்" என்பதைக் குறிக்கிறது.[14] மீண்டுமாக, ஓட்டப்பந்தய வீரர் முடிவுக் கோட்டை விருப்பநோக்கத்துடன் கண்ணோக்குதல் என்பதே உருவகமாக உள்ளது (காண்க எபிரெயர் 12:1).

இருப்பினும், முடிவுக்கோட்டைச் சென்றடைதல் என்பது தன்னிலேயே ஒரு முடிவாக இருப்பது இல்லை. வெற்றிகொள்வதற்கு ஒரு பந்தயப்பொருள்

உள்ளது. பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக'' தாம் இலக்கை நோக்கித் தொடருவதாகக் கூறினார். இன்றைய நாட்களில் இந்தப் பந்தயப்பொருள் என்பது ஒரு பதக்கமாக இருக்கலாம்; ஆனால் பவுலின் நாட்களில் விரைவிலேயே உலர்ந்து போய்விடக்கூடிய லாரல் மர இலைகளினால் செய்யப்பட்ட ஒரு கிரீடமே பொதுவாகப் பந்தயப் பொருளாக இருந்தது. பவுல் ஒருக்காலும் மங்கித் தேய்ந்து போய் விடாத பந்தயப்பொருளுக்காக முன்கண்ணோக்கிக் கொண்டிருந்தார் (காண்க 1 கொரிந்தியர் 9:24, 25; 2 தீமோத்தேயு 4:7, 8; 1 பேதுரு 1:4). அவர் அந்தப் பந்தயப்பொருளை, "தேவன் அழைத்த பரம அழைப்பு" என்று குறிப்பிட்டார். தேவன் சுவிசேஷத்தினால் நம்மை அழைக்கிறார் (2 தெசலோனிக்கேயர் 2:14) மற்றும் அவர் தம்முடன் பரலோகத்தில் வாழும்படி நம்மை அழைக்கிறார் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:3, 4). பரலோகப் பந்தயப் பொருளைப் பற்றிப் பவுல் விபரமாகக் கூறவில்லை, ஆனால் பின்வரும் விவரிப்பை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> ... பூமிக்குரிய காட்சி, தனது கடினமுயற்சிகள், பாடுகள் மற்றும் தியாகங்கள் ஆகிய எல்லாவற்றுடனும் பரலோக மகிமையினால் திடீரென்று மேல்பரவப்படுகிறது. ஒன்றுக்குப் பின் ஒன்றாக வேதவசன ரீதியான சித்திரங்கள் நிரம்புகிறது மற்றும் மனதை உயர்த்துகிறது: கர்த்தரே கூறும், "நன்கு செய்தாய்!"; "அந்த நாளிலே நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அளிக்கும் நீதியின் கிரீடம்"; பிரதான மேய்ப்பரின் பரிசான "வாடாத மகிமையின் கிரீடம்"; (எல்லாவற்றிற்கும் மேலாக) அவரது ஊழியக்காரர்கள் அவரை ஆராதிக்க, அவரது முகத்தைத் தரிசிக்க மற்றும் தங்கள் நெற்றியில் அவரது நாமம் எழுதப்பட்டிருக்கப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம்; இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அங்கிகள் மற்றும் கர்த்தருடைய முடிவில்லாத பிரசன்னம். இவை யாவற்றுடனும் கூட, "தேவன் தம்மீது அன்புகூர்ந்திருப்பவர்களுக்கு ஆயத்தம் செய்துள்ள, எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனித இருதயமும் உணர்ந்திராத விஷயங்கள்."[15]

நீங்கள் நானும், பரலோக இலக்கின் மீது நமது சிந்தைகளை அமைக்க வேண்டும். பவுல் கொலோசெயருக்கு நிருபத்தை எழுதியபோது, அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆன விதத்தைப் பற்றி அவர் பேசினார்: "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்'' (கொலோசெயர் 2:12). பின்பு, ஒரு சில வசனங்களுக்குப் பிற்பாடு அவர், "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, *மேலானவைகளையே நாடுங்கள்''* என்றும் கூடுதலாகக் கூறினார் (கொலோசெயர் 3:1, 2; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

## *மக்கள் மீது கவனம் குவித்தல் (3:15, 16)*

### *உண்மையான அக்கறை*

*பவுல் தம்மைப் பற்றியும் தமது வாழ்வின் கவனக்குவிப்பைப் பற்றியும் பேசியிருந்தார். 4ல் இருந்து 14வரையிலான வசனங்களில் நாம் ("நான்," "எனக்கு," "என்னுடைய," "எனது" போன்ற) ஒருமைப் பெயர்ச்சொலைத் திரும்பத் திரும்ப - குறைந்தபட்சம் 12 முறைகள் - கண்டறிகிறோம்.[16] இது, இந்த அப்போஸ்தலர் தமது வாசகர்களை மறந்து விட்டார் என்று அர்த்தப்படுவதில்லை. 15ம் வசனத்தில் அவர் ஒருமையிலிருந்து திடீரென்று பன்மைக்கு மாறினார்: "ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்" (வசனம் 15அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பவுலின் வாழ்வினுடைய கவனக் குவிப்பானது பிலிப்பியர்களின் வாழ்வின் கவனக் குவிப்பாகவும் இருப்பது அவசியமாக இருந்தது.*

*12ம் வசனத்தில் பவுல், "நான் ... முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் ..." என்று கூறி இருப்பதால், பவுலையும் மற்றவர்களையும் விவரிக்க இவ்விடத்தில் "தேறினவர்கள்" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருத்தலானது திகைப்புக்கு உரியதாக இருக்கலாம். நேர்மாறான கருத்தாகத் தோன்றக் கூடிய இது ஒரு எளிய விளக்கத்தைக் கொண்டுள்ளது: ஒரு வார்த்தையானது, அது பயன்படுத்தப்பட்டுள்ள வகையைப் பொறுத்து, வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும்.[17] 12ம் வசனத்தில் "தேறினவன்" என்ற வார்த்தையின் பயன்பாடு, இவ்வார்த்தை பயன்படுத்தப்படும் போது நாம் வழக்கமாக நினைக்கும் வகையிலேயே அர்த்தப்படுகிறது: "தவறற்ற தன்மை." 15ம் வசனத்தில் இது, இவ்வாழ்வில் சாதிக்கக்கூடிய சார்பளவிலான பூரணத்தன்மையைக் குறிக்கிறது. "பக்குவம்" என்ற வார்த்தை இந்தக் கருத்தை விளக்குகிறது (காண்க 1 கொரிந்தியர் 14:20 ["தேறினவர்கள்"]; எபிரெயர் 5:14 ["பூரணவயதுள்ளவர்கள்"]).* RSV *வேதாகமத்தில் 12ம் வசனத்தில்* "perfect" *என்றும் 15ம் வசனத்தில்* "mature" *என்றும் உள்ளது. ஏர்ல் பால்மர் என்பவர், "பவுலின் பாகத்தில் விருப்பநோக்கம் கொண்ட வார்த்தையின் மீதான விளையாட்டு இருந்திருக்கலாம்: நீங்கள் பக்குவமானவர்களாக இருந்தால், நீங்கள் பரிபூரணமற்றவர்கள் என்று அறிகிறீர்கள்; நீங்கள் பரிபூரணமானவர்கள் என்று நினைத்தால், நீங்கள் பக்குவமானவர்கள் அல்ல" என்று கூறினார்.[18]*

### *மென்மையான திருத்துதல்*

*பக்குவமடைந்த கிறிஸ்தவர்கள், பவுல் எழுதியிருந்தவற்றை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார், ஆனால் பலர் அத்த ஆவிக்குரிய முன்னேற்றமான நிலையை அடைந்திருந்ததில்லை என்பதை அவர் அறிந்தார் (காண்க 1 கொரிந்தியர் 3:1). தேவனுடைய வசனத்தைப் போதுமான அளவில் பற்றிக்கொள்ளாதிருத்தல் என்பது ஆவிக்குரிய பக்குவமின்மையின் ஒரு பண்பினமாக உள்ளது. 15ம் வசனத்தின் கடைசிப்பகுதியில் பவுல், ஒளியூட்டப்பட்டிராதவர்களுக்குப் பின்வருமாறு உரைத்தார்: "எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்." இவ்விடத்தில் பவுல் முரண் உரை மற்றும்/அல்லது ஏளனப்பேச்சு என்பதைப் பயன்படுத்தியிருப்பதாக, அதாவது*

*குறுகிய மனப்பான்மையுள்ள கருத்து வேறுபாட்டாளர்களுக்கு இதை உரைத்து, "நீங்கள் என்னுடன் கருத்து வேறுபட்டால், உங்களிடம் முன் அனுமானக் கருத்துக்கள் உள்ளதை உறுதிப்படுத்தத் தேவன் உங்களுக்கு ஒரு வெளிப்படுத்துதலை அனுப்புவார்!" என்று ஏளனமாகக் கூறியதாகச் சிலர் நினைக்கின்றனர். ஒரு கருத்தை நிலைநாட்டத் தேவனுடைய செய்தியாளர்கள் அவ்வப்போது முரண் உரை அல்லது ஏளனப் பேச்சைப் பயன்படுத்தினர் (காண்க 1 இராஜாக்கள் 18:27), ஆனால் அப்போஸ்தலர் அவ்விதமான அணுகுமுறையை இங்கு பயன்படுத்தினார் என்று நம்பக் காரணம் எதுவும் இல்லை.*

*அவர், தனிநபர்களுக்குத் தேவன் தமது வெளிப்பாட்டை எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பைக் கூறவில்லை. நியாயத்தீர்ப்பின் நாளில், இந்த மற்றும் பிற பாடக்கருத்துக்கள் மீதான சத்தியம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும் என்ற உண்மையைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். பிலிப்பியருக்கு எழுதிய நிருபம், அற்புதங்களின் காலத்தில் எழுதப்பட்டதால், தனிப்பட்ட அற்புதமான வெளிப்படுத்துதல் இவ்விடத்தில் மனதில் நோக்கங் கொள்ளப்பட்டிருக்கலாம். பெரும்பாலும், இந்த அப்போஸ்தலர், தேவனால் ஏவுதல் பெற்ற மற்ற போதகர்களின் அறிவுறுத்துதல்களை மாத்திரம் தமது சிந்தையில் கொண்டிருப்பார் என்பதற்கே அதிக சாத்தியம் உள்ளது. எவ்வகையிலும், தாம் பிலிப்பியர்களுக்குப் போதித்திருந்தவற்றுடன் பிற வெளிப்படுத்துதல் முரண்படாது என்பதில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.*

*பிரிவினையை ஏற்படுத்தக் கூடியவர்களைப் பவுல் கையாண்ட வழியானது அறிவுறுத்துதல் அளிக்கும் வழியாக இருந்தது. பவுலின் அப்போஸ்தலிக்க அதிகாரம் எனக்கு அளிக்கப்பட்டிருந்தால் "என்னுடன் கருத்து வேறுபட உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? நான் ஒரு அப்போஸ்தலன்!" என்று கூறும்படி நான் சோதிக்கப்பட்டிருப்பேன். சிலவேளைகளில் பவுல், தமது அப்போஸ்தலிக்க அதிகாரத்தை உறுதிப்படுத்தினார் (காண்க 1 கொரிந்தியர் 14:37, 38; 1 தெசலோனிக்கேயர் 2:13), ஆனால் அந்த அணுகுமுறை இந்த சந்தர்ப்பத்தில் ஏற்றது என்று அவர் நினைக்கவில்லை என்பது உறுதி. அதற்குப் பதிலாக அவர்களிடத்தில் அவர் மென்மையாக இருந்தார், காலங்கள் கடக்கும்போது அவர்கள் இன்னும் சிறப்பாகக் கற்றுக்கொள்வார்கள் என்ற உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.*

## ஒரு பொதுவான கட்டளை

*பவுல் இந்தப் பகுதியைப் பின்வரும் புத்திகூறுதலுடன் முடித்தார்: "ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக"[19] (வசனம் 16).* NASB *வேதாகமத்தில்* "standard" *("ஒழுங்காய்") என்ற வார்த்தை சாய்வெழுத்துக்களில் உள்ளது, இது மொழிபெயர்ப்பாளர்களால் இந்த வார்த்தை கூடுதலாகக் கூட்டப்பட்டது என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. நேரடியான அர்த்தத்தில் பவுல், "நாம் ஒரே விஷயத்தில் வாழ்வதைக் காத்துக்கொள்வோமாக" என்று கூறினார்.* KJV *வேதாகமத்தில் "ஒரே சட்டம்" என்றுள்ளது. "வாழ்ந்து கொண்டு இருப்போமாக" என்பது "அணி" அல்லது "வரிசை" என்று அர்த்தப்படும்* stoicheo *என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து*

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[20] இது, ‘‘வரிசையில் நடக்க’’ என்று அர்த்தப்படுகிறது.[21] அப்போஸ்தலரின் அறிவுறுத்துதல் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருக்கக் கூடும்: ஆவிக்குரிய வகையில் ஒன்றுபட்டிருக்க நாம் - தேவனுடைய வசனம் என்ற - பொதுவான அதிகாரத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இருப்பினும் பவுலின் வார்த்தைகள் சந்தர்ப்பப் பொருளில், அவருடன் கருத்து வேறுபட்டவர்களுக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தன. ஆரோக்கியமான போதனைகள் அவர்களை ஒளியூட்டுவதற்கு, அவர்களுக்கு சிந்தையில் ஒரு குறிப்பிட்ட நிலைப்பாடு அவசியமாயிருந்தது: அவர்கள் கூடுதலான “வெளிச்சத்தை” (போதனையை) பெறத் தயாராவதற்கு முன்பு, அவர்கள் ஏற்கனவே கொண்டிருந்த ‘‘வெளிச்சத்தில்’’ (அவர்கள் ஏற்கனவே “தேறியிருந்தவற்றில்”) நடப்பது அவசியமாயிருந்தது. நாம் செய்ய வேண்டும் என்று அறிந்துள்ளவற்றைச் செய்ய மறுப்பவராக இருக்கும் தனிநபர் ஒருவர் (யாக்கோபு 4:17), இன்னும் அதிகம் கற்றுக்கொள்ளும் மன அமைவு எதையும் கொண்டிருப்பதில்லை. 3:15ஆ, 16 ஆகிய வசனங்கள் பற்றி LB வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை காணப்படுகிறது: “நீங்கள் கொண்டுள்ள சத்தியத்திற்கு நீங்கள் முழுமையாகக் *கீழ்ப்படிந்தால்* - தேவன் இதை உங்களுக்கு எளிதாக்குவார் என்று நான் நம்புகிறேன்.’’ (வலியுறுத்தம் என்னுடையது.) இயேசு, ‘‘அவருடைய சித்தத்தின்படி *செய்ய* மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்’’ என்று கூறினார் (யோவான் 7:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இதை டேவிட் லிப்ஸ்கோம்ப் என்பவர் பின்வருமாறு கூறினார்: “தேவனுடைய சித்தம் தவிர வேறு விருப்பமோ அல்லது முன்னுரிமையோ இன்றி, தேவனுடைய சித்தத்தை அறிந்து அதைச் செய்ய வேண்டும் என்ற உண்மையான விருப்பம், தெய்வீக சத்தியத்தின் முழுமைக்குள் வழிநடத்தும்.’’[22]

## முடிவுரை

இந்தப் பாடத்தில் நாம், பல சத்தியங்களைத் தொட்டிருக்கிறோம், ஆனால் நீங்கள், பிலிப்பியர் 3ல் பவுலின், “வாழ்விற்கான கோட்பாட்டை’’[23] மறக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்:

> சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (வசனங்கள் 13, 14).

இதை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள, நம்மில் ஒவ்வொருவரும், பவுலின் வார்த்தைகள் இவ்வாறு இருக்கின்றன என்று சொல்ல முடியும்.

- நான் ஆவிக்குரிய வகையில் இருக்க வேண்டிய பிரகாரம் இல்லாதபோது, எனக்கு ஆறுதலாக இருக்கின்றன.
- நான் கிறிஸ்தவ வாழ்வில், என்னால் முடிந்த அளவு அல்லது எனக்குத்

தேவையான அளவு முன்னேறியிருப்பதாக நான் நினைக்கும்போது எனக்கு ஒரு திருத்துதலாக இருக்கின்றன.

- எனது வாழ்வின் கவனக்குவிப்பைக் கூர்மைப்படுத்திக் கொள்வதற்கு எனக்கு ஒரு அறைகூவலாக இருக்கின்றன: கிறிஸ்துவின் ஆளுமைத்தன்மையின் மீது, வழியின் முடிவில் உள்ள பந்தயப்பொருளின் மீது, மற்றும் எனது பயணத்தில் நான் எதிர்கொள்ளும் - தேறின மற்றும் தேறியிராத - மக்கள் மீது கவனம் குவிக்க.

வாழ்வில் பல விஷயங்கள் முக்கியமானவையாக உள்ளன, ஆனால் இயேசுவைப் பின்பற்றுதல் என்பதைப் போன்று முக்கியமான விஷயம் வேறு எதுவும் இல்லை. “தேவனே, பவுலைப் போல நான், ஒரு கவனம் குவிக்கப்பட்ட வாழ்வை வாழ எனக்கு உதவும்” என்று ஜெபிப்போமாக.

---

குறிப்புகள்

[1]நடவுக்கலப்பை என்பது ஒரு குதிரை அல்லது ஒரு கோவேறுக் கழுதையால் இழுக்கப்பட்டது. [2]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 138. (Emphasis mine.) [3]10ம் வசனத்தில் உள்ள வரிசை முறைமை நாம் எதிர்பார்க்கும் வகையில் இருப்பதில்லை: இது, பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் என்றிருப்பதற்குப் பதிலாக, உயிர்த்தெழுதல், பாடுகள், மற்றும் மரணம் என்றுள்ளது. ஒருவேளை வரிசை முறையில் குறிப்பிடத் தக்க பண்பு இருக்கலாம், அல்லது ஒருவேளை அவ்வாறு இல்லாதிருக்கலாம். [4]Robert Laidlaw in *The Reason Why*; quoted in Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 84. [5]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 87. [6]Hawthorne, 146. [7]இந்தத் தகவலை நான், வேதாகமப் போதகர்கள் மற்றும் பிரசங்கியார்களின் பயனுக்காக இங்கு உள்ளடக்கியிருக்கிறேன். உங்கள் உரையைக் கேட்பவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தேவையானது என்ன என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். [8]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 845-46. [9]சில எழுத்தாளர்கள், இது கால்களினால் ஓடும் ஓட்டப் பந்தயத்திற்குப் பதிலாக இரதப் பந்தயத்தின் உருவகமாக உள்ளது என்று நம்புகின்றனர். [10]Malone, 93.

[11]John A. Knight, *Beacon Bible Expositions*, vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 100. [12]உங்கள் உரையைக் கேட்பவர்கள் அறிந்துள்ள ஓட்டப்பந்தய வெற்றிவீரர் ஒருவரைப் பற்றிய விவரிப்பை நீங்கள் இவ்விடத்தில் கூடுதலாகக் கூற விரும்பலாம். [13]ரோமர் 12ல் விசேஷமாக 4முதல் 8வரை உள்ள வசனங்களைக் கவனியுங்கள். 1 கொரிந்தியர் 12ம் அதிகாரம் அற்புத வரங்களைப் பற்றிப் பேசுகிறது, ஆனால் நம் ஒவ்வொருவருக்கும் தேவன் அருளியிருக்கும் இயல்பான வரங்கள் (திறமைகள்) குறித்து நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். விசேஷித்த ஊழியங்களின் பட்டியலை உள்ளடக்குகிற எபேசியர் 4:11-16 என்ற இன்னொரு வசனப்பகுதியும் பயன்படுத்தப்படலாம். இவ்வசனப்பகுதி, முதல் நூற்றாண்டின் அற்புத வரங்களை இயல்பான வரங்களுடன் ஒன்று கலக்கிறது, ஆனால் மீண்டும் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். [14]Vine, 714. [15]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy,* The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove,

Ill.: Inter-Varsity Press, 1984), 177. *மோட்யெர் பின்வரும் வசனங்களை ஆதார மூலங்களாகப் பட்டியலிட்டார்: லூக்கா 19:17; 2 தீமோத்தேயு 4:18; 1 பேதுரு 5:4; வெளிப்படுத்தின விசேஷம் 22:3, 4; 7:17; 1 தெசலோனிக்கேயர் 4:17; 1 கொரிந்தியர் 2:9.* [16]NASB *வேதாகமத்தில் மொழிபெயர்ப்பாளர்களால் பன்னிரெண்டாவது ஒருமைப்பெயர்ச்சொல் ("நான்") தரப்பட்டுள்ளது.* [17]*இதை நீங்கள், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான ஒரு வார்த்தையைக் கொண்டு விவரிக்க விரும்பலாம். எனது மனதிற்கு வரும், பல அர்த்தம் கொண்ட ஆங்கில வார்த்தைகளில்,* "bear" *மற்றும்* "fast" *ஆகியவை உள்ளடங்கும்.* [18]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1992), 137. [19]KJV *வேதாகமத்தில் "நாம் ஒரே விஷயத்தைக் கவனிப்போமாக" என்பது கூடுதலாக உள்ளது. இந்த முடிவிற்கான கையெழுத்துப் பிரதியின் ஆதாரம் இலேசானதாக உள்ளது, ஆனால் இது இவ்வசனத்தின் அர்த்தத்தை மாற்றுவதில்லை.* [20]Vine, 1207.

[21]Jac J. Muller, *The Epistles of Paul to the Philippians and to Philemon,* The New International Commentary on the New Testament, ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1955), 127. [22]David Lipscomb and J. W. Shepherd, *A Commentary on the New Testament Epistles,* vol. 4, *Ephesians, Philippians, and Colossians* (Nashville: Gospel Advocate Co., 1939), 210. [23]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 155.